# நீர்வள ஆதாரத் துறை
# பொதுப்பணித் துறை

# திட்டச் சாதனை
# 2011–2012

©
தமிழ்நாடு அரசு
2012

# திட்டச் சாதனை 2011–2012

# நீர்வள ஆதாரத் துறை

## 1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டங்களின் தற்போதைய நிலை

### 1.1. காவேரியாற்றினை, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டம்.

காவேரியாற்றினை, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நிலஅளவை மற்றும் மட்டஅளவைப் பணிகளை மேற்கொள்ள ரூ.1.7 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தில் காவேரி ஆற்றிலிருந்து 258 கி.மீ. நீளத்திற்கு புதிய கால்வாய் அமைத்து 7 டி.எம்.சி.அடி வெள்ள நீரினை கட்டளை கதவணையிலிருந்து குண்டாறுக்கு திருப்பிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம், 186636 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் உறுதிபடுத்தப்பட்டு மேலும், 32871 ஏக்கர் நிலம் கூடுதல் பாசன வசதி பெறும். திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் நகரங்கள் வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கப்படும்.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ. 5166 கோடி மதிப்பில் இரண்டு கட்டங்களில் தயாரிக்கப்பட்டு, வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி 15.11.2011 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் அருகே கம்பரசம்பேட்டை கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்

காவேரி ஆற்றின் படுகையிலிருந்து நிலத்தடி நீர் ஆழ்குழாய் கிணறுகள் மூலமாக குடிநீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது. கோடைகாலத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விடுவதால், குடிநீராதாரங்களுக்கு பயன்படும் வகையில் நிலத்தடி நீரினை செறிவூட்டும் பொருட்டு திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமம் முத்தரசநல்லூர் அருகே

காவேரியின் குறுக்கே ரூ. 32 கோடியில் நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டி.எப் XVII-ன் நிதியுதவியின் மூலம் தடுப்பணைஅமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் மணல் போக்கிகள் கொண்ட கான்கிரீட் தடுப்பணை, நிலத்தடி தடுப்புச் சுவர் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் ஆகிய இனங்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் காவேரி படுகையை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். இத்திட்டத்திற்கான பணிகள் மார்ச் 2012–ல் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

## 1.3. அத்திக்கடவு – அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டம்

அத்திக்கடவு - அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசு ரூ.30 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அத்திக்கடவு –அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்தின் மூலம் வெள்ளக் காலங்களில் பவானி ஆற்றின், வெள்ள உபரி நீரினை வினாடிக்கு 2000 கன அடி வீதம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 31 நீர்வள ஆதாரத் துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 538 குட்டைகளுக்கு திருப்பி விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விரிவான திட்ட அறிக்கை ரூ.1862 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி அனுப்பப்படவுள்ளது.

## 1.4. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் திறனைஅதிகரித்தல்

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யவும், கிருஷ்ணா நீரை முழுமையாக தேக்கி வைக்கவும் மூன்று புதிய நீர்த்தேக்கங்கள் அமைப்பதன்மூலமும் தற்போதுள்ள ஏரிகளை புனரமைப்பதன் மூலமும் நீர்த்தேக்கத்திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.4.1. புதிய நீர்த்தேக்கங்கள் அமைத்தல்

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வைகண்டிகை கிராமங்களின் அருகில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்க ரூ. 330 கோடிக்கு அரசு ஒப்புதல்

அளித்துள்ளது. இதன் மூலம் 1 டி.எம்.சி.அடி கிருஷ்ணா நீர் (இரு நிரப்புகளில்) தேக்கப்படவுள்ளது. இதற்கான நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

(ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், திருக்கண்டலத்தில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ரூ.35 கோடி மதிப்பீட்டில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் தடுப்பணை அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், இராமஞ்சேரியில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்க விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

### 1.4.2. ஏரிகளைப் புனரமைத்தல்

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, சோழவரம், போரூர், நேமம் மற்றும் அயனம்பாக்கம் ஏரிகளின் நீர்த்தேக்கத்திறனை கூடுதலாக்கவும் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரியினை புனரமைக்கவும் ரூ.130 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

### 1.4.3. செங்குன்றம் ஏரியினை பலப்படுத்துதல்

செங்குன்றம் ஏரியின் கலிங்கல், மதகு மற்றும் வழிந்தோடியினை புனரமைத்து ஏரியினை பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏரியின் கரையினை பலப்படுத்துதல், கலிங்கல், மதகு மற்றும் வழிந்தோடியினை புனரமைத்தல், அணுகுசாலை மற்றும் பாதுகாப்பு வேலி அமைக்க ரூ.10.56 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 2. 2011–2012 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள்

### 2.1. மாநில நிதிப் பணிகள்

- தஞ்சாவூர் மாவட்டம், கீழ் அணைக்கட்டில் உள்ள தெற்கு மற்றும் வடக்கு கிளைநீர்ப் போக்கியை புனரமைத்தல் மற்றும் கனிட்டிங் (Gunitting) செய்வதற்கு ரூ.6.21 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 53418 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், மணமேடு கிராமத்தில் அகண்ட காவிரியின் இடது கரை மைல் 97/0 –ல் அமைந்துள்ள கொண்டாம்வாரி வடிகாலின் மதகினை புனரமைக்க ரூ.90 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு 2009 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் கடானா திட்டத்தின் கீழ் காக்கநல்லூர் அணைக்கட்டினை புனரமைத்து நவீனப்படுத்த ரூ. 63 இலட்சத்திற்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 331 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் பவள விழா நினைவுக்கட்டடம் ரூ.1 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை கிராமத்தில் திருமேனி ஏரி மற்றும் அதன் ஊட்டுக் கால்வாயை நவீனப்படுத்தும் பணிக்கு ரூ.1.17 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 107 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- தஞ்சாவூரில் கல்லணை கால்வாயின் இரு கரைகளிலும் இர்வின் பாலம் எல்.எஸ். 13/6797 முதல் நாகப்பட்டினம் சாலை பாலம் எல்.எஸ். 14/0170 வரை நடைபாதை மற்றும் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.2.35 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- காவிரி டெல்டாவில் பழுதடைந்த கட்டுமானங்களை சீரமைத்து புனரமைப்பதற்காக (2009–2010) 443 பணிகளுக்கு ரூ.33.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

## 2.2. நபார்டு திட்டங்கள்

- மதுரை மாநகரில் செல்லூர் ஏரியின் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ. 7.1 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. மக்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை இப்பணியில் மூடப்பட்ட கால்வாயாக கட்ட உத்திரவிடப்பட்டது.

இதன் அடிப்படையில் திறந்த கால்வாய்க்கான ஒப்பந்த புள்ளி முடிவு செய்யப்பட்டது. கரைகள் மற்றும் கால்வாய்களை பலப்படுத்தும் பணி தவிர்த்து அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. மூடப்பட்ட கால்வாய் அமைத்தல் மற்றும் கரைகளை பலப்படுத்தும் பணிக்காக ரூ. 7.03 கோடிக்கு தனியே கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், கல்லணைக் கால்வாயில் எல்.எஸ். 0.75 கி.மீ. முதல் எல்.எஸ். 58.67 கி.மீ. வரையிலும் மற்றும் கள்ளப்பெரம்பூர் ஏரியையும் புனரமைக்க ரூ. 130.34 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 2430 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, கல்லணைக் கால்வாயின் எல்.எஸ். 58.67 கி.மீ. முதல் எல்.எஸ். 92.20 கி.மீ. வரையிலான பகுதியை புனரமைக்க ரூ.28.58 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 27591 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சேலம் மாவட்டம், மற்றும் வட்டத்தில் உள்ள நெய்க்காரப்பட்டி கண்மாயை புனரமைத்து மேம்படுத்த ரூ. 2.70 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 90 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.4.02 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- திருநெல்வேலி மாவட்டம், நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாபுதூர் அணைக்கட்டை மறுசீரமைக்கும் பணி ரூ.8 கோடி செலவில், 252 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், முடியனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.1 கோடி செலவில், 238 எக்டேர் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளது.

- திருச்சி மாவட்டத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே மேலணையில் பழுதடைந்துள்ள கதவணைகளை ரூ.2 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- மதுரை மாவட்டம், வைகை ஆற்றின் விரகனூர் மதகின் இடிந்த நிலையில் உள்ள தடுப்புத் தரைத் தளத்தை (talus apron) மறு சீரமைத்தல், சேதமடைந்த இரும்பு மதகுகளை புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் ரூ.5 கோடி செலவில் 16766 எக்டேர் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன.

- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் அணைக்கட்டுக் கால்வாயை புனரமைக்கும் பணி ரூ.8.50 கோடி செலவில் 421 எக்டேர் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளது.

- அரியலூர் மாவட்டம், விளாங்குடி ஓடையின் குறுக்கே, ரூ.35 இலட்சம் செலவில் அணைகள் கட்டப்பட்டுள்ளது.

## 2.3. பாசனப் பரப்பு மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம்

மத்திய அரசு உதவித் திட்டமான பாசனப் பரப்பு மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க, இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் பங்கேற்புடன், பாசனத்திற்கு தேவையான நீர், சிறந்த நீர் மேலாண்மையின் மூலம் சரி விகிதாச்சார முறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வினாடிக்கு 4.5 கன மீட்டர் கடத்தும் திறன் உள்ள நீர் பகிர்வு அமைப்புகளுக்கு மேல் உள்ள வெளிப்போக்கிகளின் குறைபாடுகளை சரி செய்யும் பணி நீர்வள ஆதாரத்துறையைச் சார்ந்ததாகும்.

2011-2012 ஆம் ஆண்டு வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டம், திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம் மற்றும் குண்டாறு – சித்தாறு –கருப்பாநதித் திட்டங்களில் மேற்கண்ட குறைபாடுகளை சரி செய்யும் பணிகளுக்கான அனுமதியை மத்திய அரசு அளித்துள்ளது.

தமிழக அரசு எக்டேருக்கு ரூ.600 வீதம் 24016.70 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் விதமாக ரூ.14.41 கோடி மதிப்பிலான பின்வரும் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | ஆயக்கட்டு பரப்பு (எக்டேரில்) | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூ.கோடியில் ) |
|---|---|---|---|---|
| 1 | வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டம் | 21 | 9200.00 | 5.52 |
| 2 | திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம் | 49 | 7000.00 | 4.20 |
| 3 | குண்டாறு – சித்தாறு – கருப்பாநதித் திட்டம் | 48 | 7816.70 | 4.69 |
| | **மொத்தம்** | **118** | **24016.70** | **14.41** |

மதகுகள், தலைமதகுகள், போக்கிகளை மறு கட்டுமானம் செய்தல், ஏற்கெனவே உள்ள கலிங்குகள், வெளிப்போக்கிகள், மதகுக் கதவுகளை பழுதுபார்த்தல், தூர்வாருதல் மற்றும் வாய்க்கால்களின் கரைகளை பலப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட 3 திட்டங்களிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 2.4. பகுதி II திட்டங்கள் 2011–2012

2011–2012 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் 40 திட்டப் பணிகளுக்கு ரூ. 6. 84 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பின்வரும் 27 திட்டப்பணிகள் முடிக்கப்பட்டன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அம்மாப்பேட்டையில் மேட்டூர் கால்வாய் பிரிவிற்கு பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 7.00 |
| 2. | தஞ்சாவூர் மாவட்டம், மற்றும் வட்டம், கல்லணைக் கால்வாய் நீரளவைப் பிரிவிற்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 7.00 |

| | | |
|---|---|---|
| 3. | தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், ஓரத்தநாடு பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 7.00 |
| 4. | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணத்தில் ஆற்றுப்பாதுகாப்பு பிரிவு அலுவலர் குடியிருப்பு கட்டுதல். | 12.00 |
| 5. | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் அய்யாவடி கிராமத்தில் பாசன உதவியாளர்களுக்கு இரட்டைக் குடியிருப்புகள் கட்டுதல். | 10.00 |
| 6. | திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், நல்லூர் கிராமம், எம்.கே. தலைப்பில் வலங்கைமான் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 8.07 |
| 7. | திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பேரளத்தில் உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டுதல். | 15.00 |
| 8. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள உதவிப் பொறியாளர் குடியிருப்பு எண்.42ன் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 9.00 |
| 9. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொப்பணித் துறை வளாகத்தில் உள்ள இளநிலை பொறியாளர் குடியிருப்பு எண்.43ன் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 7.50 |
| 10. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள உபகோட்ட அலுவலகத்தின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 6.00 |
| 11. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப்பணித் துறை வளாகத்தில் கதவு எண்.17 முதல் 24 வரை உள்ள டார்மிண்டரி குடியிருப்புகளின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 28.00 |
| 12. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள கதவு எண்.12 முதல் 16 வரை, 29 முதல் 38 வரை மற்றும் 46 முதல் 53 வரை உள்ள தலைமை பணியாளர் குடியிருப்புகளின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 40.00 |

| | | |
|---|---|---|
| 13. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள கதவு எண்.26 முதல் 27 வரை, மற்றும் 44 முதல் 45 வரை உள்ள எழுத்தர் குடியிருப்புகளின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 20.00 |
| 14. | ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோட்டில் உள்ள கீழ் பவானி வடிநில உபகோட்டம் எண் 1 அலுவலகக் கட்டடத்தை மேம்படுத்துதல். | 10.00 |
| 15. | ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், மொடக்குறிச்சியில் பிரிவு அலுவலர் குடியிருப்பு கட்டும் திட்டம். | 7.00 |
| 16. | திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி நகர் அலுவலர் குடியிருப்பு உதவி செயற்பொறியாளர் குடியிருப்பு எண் 2ல் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றும் திட்டம். | 11.00 |
| 17. | திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் திருமூர்த்தி நகரில் உள்ள உதவி செயற் பொறியாளர் குடியிருப்பு எண்5 (திட்ட இல்லம் 1) ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றும் திட்டம். | 12.00 |
| 18. | திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் பொங்கலூரில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட குடியிருப்பில் உள்ள உபகோட்ட அலுவலக கட்டடத்தின் மங்களூர் ஓட்டுக் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றுதல். | 11.50 |
| 19. | மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், குப்பணம்பட்டியில் உள்ள பிரிவு அலுவலகத்தை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல். | 7.00 |
| 20. | மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், குப்பணம்பட்டியில் உள்ள உதவிப் பொறியாளர் /இளநிலைப் பொறியாளர் குடியிருப்புகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல். | 8.00 |
| 21. | தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் அமைந்துள்ள உபகோட்ட அலுவலக கட்டடம் மறு கட்டுமானம் செய்தல். | 20.00 |
| 22. | திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், பாணான் குளத்தில் பிரிவு அலுவலகத்தை திரும்பக் கட்டுதல். | 7.00 |

| | | |
|---|---|---|
| 23. | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சேரன்மகாதேவியில் கன்னடியன் கால்வாய் பிரிவு அலுவலர் குடியிருப்பை திரும்பக் கட்டுதல். | 10.00 |
| 24. | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் சேரன்மகாதேவியில் அமைந்துள்ள ஆய்வு மாளிகையை மேம்படுத்துதல். | 10.00 |
| 25. | திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம் பாணான்குளத்தில் ஆய்வு மாளிகையை மறு கட்டுமானம் செய்தல். | 18.00 |
| 26. | நாங்குனேரி வட்டம், களக்காடு கிராமத்தில் உள்ள ஆய்வு மாளிகையை மறு கட்டுமானம் செய்தல். | 15.00 |
| 27. | பொதுப்பணித்துறை நீ.வ.ஆ.அமைப்பின் செயற் பொறியாளர்/உதவிசெயற் பொறியாளர்களுக்கான 14 எண்ணிக்கை மகேந்திரா & மகேந்திரா பொலிரோ ஈப்புகள் வாங்குதல். | 76.25 |
| | **மொத்தம்** | **399.32** |

## 2.5. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)

### 2010–11 ம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திலுள்ள எர்ராம்பட்டி அணைக்கட்டு மற்றும் சாத்தியார் திட்டத்தின் ஏரிகளை புனரமைக்கும் பணி ரூ.76.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 248 எக்டேர் ஆயக்கட்டுக்கு பாசனம் உறுதி செய்யப்பட்டு, 749 டன் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது.

### 2011–12 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னம்பட்டி கிராமம் கீழப்புடையன் ஏரியை புனரமைத்தல் பணி ரூ.15.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் 10.24 எக்டேர் ஆயக்கட்டு மற்றும் 276 விவசாயிகள் பயன்பெறும் வகையில் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், பாளையப்பட்டி கிராமம் பாளைய ஏரியை புனரமைத்தல் பணி ரூ.15.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில்

முடிக்கப்பட்டுள்ளது. இதனால் **13.49** எக்டேர் ஆயக்கட்டு மற்றும் **278** விவசாயிகள் பயன்பெறும் வகையில் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், குன்னூர் ஆற்றுப்பாசன முறையிலுள்ள நெல்லித்துறை அணைக்கட்டை புனரமைக்கும் பணி ரூ.40.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் **61.50** எக்டேர் ஆயக்கட்டு மற்றும் **90** விவசாயிகள் பயன்பெறும் வகையில் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 2.6. சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன் சென்னை பெருநகர நீர் வழி தடங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பைக் கூளங்கள், கழிவுகள், செடி, கொடிகள் மற்றும் அனைத்து தடங்கல்களை அகற்றி சீரான நீரோட்டத்தினை உருவாக்க அரசு ஒப்புதல் அளித்த ரூ.**3.62** கோடி மதிப்பிலான **58** பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இதனால் வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்படும் நீர் தேங்குதல், வெள்ளம் மற்றும் வடிகால்களில் அடைப்புகள் ஏற்படுதல் போன்றவைகளிலிருந்து சென்னை மாநகரம் திறம்பட காப்பாற்றப்பட்டது.

## 2.7. வெள்ள பாதுகாப்புத் திட்டங்கள்

### 2.7.1. வெள்ள மேலாண்மைத் திட்டம்

வெள்ளத் தணிப்புப் பணிகளான ஆறுகளின் கரைகளை பலப்படுத்துதல், மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகும் இடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைத்து பாதுகாத்தல், பழுதடைந்த பாசன கட்டுமானங்களை கட்டுதல் / மீளக் கட்டுதல், தூண்டில் வளைவு அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் வெள்ள பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

(i) **திருவள்ளூர் மாவட்டத்தில், ஆரணியாற்றின் ஏ.என்.குப்பம் அணைக்கட்டின் மேல் மற்றும் கீழ் நீர்வழிப்பாதைகளின் வெள்ளப்பாதுகாப்பு மற்றும் இலட்சுமிபுரம் அணைக்கட்டின் கீழ் நீர் வழிப்பாதையிலிருந்து புலிகாட் முகத்துவாரம் வரையிலான வெள்ளப் பாதுகாப்பு பணிகள்**

இப்பணிகள் ரூ. 12.41 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி வட்டங்களிலுள்ள சுமார் 29382 மக்களும் 30 கிராமங்களும் பாதுகாக்கப்படுகின்றனர்.

**(ii) கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தின் வெள்ளப் பாதுகாப்பு பணிகள்**

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தின் வெள்ளப் பாதுகாப்பு பணிகள் ரூ.164.32 கோடி திட்ட மதிப்பீட்டில் 12 தொகுப்புகளாக கீழ்கண்டவாறு முடிக்கப்பட்டுள்ளது.

(அ) கடலூர் மாவட்டத்தில் தொழுதூர் முதல் பரங்கிப்பேட்டை வரை (எல்.எஸ்.0 கி.மீ. முதல் எல்.எஸ். 105 கி.மீ. வரை) வெள்ளாற்றில் ரூ.77 கோடி (5 தொகுப்புகள்) திட்டமதிப்பீட்டில் நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்.

(ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் முக்தா ஆறு (எல்.எஸ்.0 கி.மீ. முதல் எல்.எஸ். 27 கி.மீ. வரை), மணி ஆறு (எல்.எஸ்.0 கி.மீ. முதல் எல்.எஸ். 30 கி.மீ. வரை), பாப்பகால் ஓடை (எல்.எஸ். 0 கி.மீ. முதல் எல்.எஸ். 21.50 கி.மீ. வரை), மணிமுக்தாறு (எல்.எஸ். 0 கி.மீ. முதல் எல்.எஸ். 35 கி.மீ. வரை) மற்றும் கடலூர் மாவட்டத்தில் எல்.எஸ். 35 கி.மீ முதல் எல்.எஸ்.75 கி.மீ. வரையிலான மணிமுக்தா ஆற்றில் ரூ.87.32 கோடி (7 தொகுப்புகள்) நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்.

மேற்கண்ட இரண்டு கட்டப்பணிகளும் முடிக்கப்பட்டு விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் சுமார் 402539 மக்கள் மற்றும் 124 கிராமங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

**(iii) கடலூர் மாவட்டத்தில் பண்ரூட்டி மற்றும் கடலூர் நகரங்களை பெண்ணையாறு, கெடிலம், உப்பனாறு, பரவனாறு மற்றும் தெற்கு மலட்டாற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் பணி – திட்ட மதிப்பீடு: ரூ.68.41 கோடி**

கடலூர் மற்றும் பண்ரூட்டி நகரங்களுக்கு வெள்ளப் பாதுகாப்பு அளிப்பதற்காக பெண்ணையாறு, தெற்கு மலட்டாறு, கெடிலம், உப்பனாறு மற்றும் பரவனாறு ஆறுகளில் வெள்ளப் பாதுகாப்பு

கரைகளை உருவாக்குதல் மற்றும் வடிகால் வசதிகளை மேம்படுத்தும் பணிகள் 6 தொகுப்புகளாக செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 74471 மக்களும் 122 கிராமங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

(iv) **திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் நாபாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் – திட்ட மதிப்பீடு: ரூ.14.50 கோடி**

திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் நாபாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பொன்னேரி வட்டத்தில் உள்ள சுமார் 10711 மக்கள் 16 கிராமங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

# 3. 2011-12ஆம் ஆண்டில் நடைபெற்று கொண்டிருந்த திட்டங்கள்

## 3.1 நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.2547 கோடி மதிப்பீட்டில் 2007 ஆம் ஆண்டு முதல், ஆறு ஆண்டு காலத்தில் 6.69 லட்சம் எக்டேர் பாசனப்பரப்பு பயனடைய அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நீர்வள ஆதாரத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மீன்வளத்துறை ஆகிய ஏழு துறைகள் ஈடுபட்டு வருகின்றன:–

i. தமிழகத்தில் உபவடிநில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ii. 6.69 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு அடங்கிய 61 தெரிவு செய்யப்பட்ட உபவடிநிலங்களின் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம், பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது.

iii. மேலும், நீர் ஆதாரங்களைப் புனரமைத்து சீர்படுத்துதல் மூலம் ஏரிப்பாசன முறையை நவீனமாக்குதல் மற்றும் கால்வாய்ப்பாசன அமைப்பை சீர்செய்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

iv. மேம்படுத்தப்பட்ட வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப்பயிர் செய்தல், நுண்பாசனம், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் போன்ற பணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பெருமளவு நீர்ப் பகிர்ந்தளிப்பு முறையினை மேம்படுத்துதல் மூலம் செயல்படுத்தப்படும்.

### 3.1.1. திட்ட செயலாக்கம் (2007–2013):

| **கட்டம்** | **உப வடிநிலங்களின் எண்ணிக்கை** | **செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு** | **பாசனப் பரப்பளவு (எக்டேரில்)** |
|---|---|---|---|
| I | 9 | 2007-08 | 289498.50 |
| II | 16 | 2008-09 | 67206.21 |
| III | 30 | 2009-10 & 2010-11 | 182119.18 |
| IV | 6 | 2011-12 | 130330.56 |
| **மொத்தம்** | **61** | | **669154.45** |

| **வ. எண்** | **கட்டம்** | **அங்கீகரிக்கப்பட்ட உபவடிநிலங்களின் எண்ணிக்கை** | **மதிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|---|
| 1 | I | 76 | 451.25 |
| 2 | II | 43 | 187.95 |
| 3 | III | 136 | 426.60 |
| 4 | IV | 69 | 300.03 |
| | **மொத்தம்** | **324** | **1365.83** |

### சுருக்கம் – கட்டம் வாரியாக

| கட்டம் | உபவடி நிலங்களின் எண்ணிக்கை | பயன் பெறும் பாசனப் பரப்பு (எக்டேரில்) | புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏரிகளின் எண்ணிக்கை | அணைக் கட்டுகளின் எண்ணிக்கை | வரத்துக் கால்வாய்களின் நீளம் (கீ.மீ.) |
| I | 9 | 289498.50 | 1634 | 233 | 3067.67 |
| II | 16 | 67206.21 | 757 | 165 | 1091.62 |
| III | 30 | 182119.18 | 1678 | 256 | 2586.50 |
| IV | 6 | 130330.56 | 853 | 15 | 1312.91 |
| | **61** | **669154.45** | **4922** | **669** | **8058.70** |

### 3.1.2. கட்டம் – I (9 உப வடிநிலங்கள்) திட்டமிடப்பட்டுள்ள பணிகள் விவரம்

| உப வடிநிலம் | புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏரிகளின் எண்ணிக்கை | | அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | | கால்வாய்களின் நீளம் (கீ.மீ.ல்) | |
| | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது |
| வராகநதி | 236 | 236 | 37 | 37 | 391.90 | 391.90 |
| கோட்டக்கரையாறு | 310 | 302 | 7 | 7 | 199.54 | 182.66 |
| மணிமுத்தாறு | 378 | 376 | 31 | 30 | 49.86 | 49.86 |
| பாம்பாறு | 292 | 287 | 20 | 20 | 220.65 | 220.65 |
| அர்சுனாநதி | 77 | 77 | 30 | 30 | 127.18 | 127.18 |
| தெற்கு வெள்ளாறு | 292 | 291 | 29 | 29 | 297.35 | 297.35 |
| மேல் வெள்ளாறு | 49 | 49 | 79 | 79 | 260.54 | 245.00 |
| ஆழியாறு | 0 | 0 | 0 | 0 | 189.10 | 187.61 |
| பாலாறு | 0 | 0 | 0 | 0 | 1331.55 | 1313.86 |
| | **1634** | **1618** | **233** | **232** | **3067.67** | **3016.08** |

## 3.1.3. கட்டம் – II (16 உப வடிநிலங்கள்) திட்டமிடப்பட்டுள்ள பணிகள் விவரம்

| உப வடிநிலம் | புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏரிகளின் எண்ணிக்கை | | அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | | வரத்துக் கால்வாய்களின் நீளம் (கீ.மீல்) | |
| | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது |
| பெண்ணையாறு முதல் கிருஷ்ணகிரி வரை | 6 | 3 | 11 | 2 | 108.22 | 56.33 |
| பொய்ணி | 142 | 127 | 1 | 1 | 282.49 | 270.49 |
| கௌண்டன்ய நதி | 33 | 33 | 0 | 0 | 111.45 | 111.45 |
| கலிங்கலாறு | 11 | 11 | 7 | 7 | 10.61 | 8.35 |
| நிசபா நதி | 40 | 40 | 17 | 16 | 8.65 | 8.65 |
| சிந்தபள்ளி உப்போடை | 6 | 6 | 1 | 1 | 0.80 | 0.80 |
| செங்கோட்டை ஆறு | 24 | 21 | 2 | 2 | 5.20 | 5.20 |
| தெற்காறு | 103 | 103 | 11 | 11 | 21.96 | 21.96 |
| மேல்குண்டாறு | 22 | 22 | 22 | 22 | 37.09 | 30.85 |
| மேல்வைகை | 9 | 9 | 4 | 4 | 2.05 | 2.05 |
| வரட்டாறு – நாகலாறு | 7 | 7 | 9 | 9 | 0.83 | 0.83 |
| ஆனைவாரி ஓடை | 16 | 16 | 5 | 5 | 17.28 | 17.28 |
| சின்னாறு | 33 | 33 | 9 | 9 | 44.54 | 44.54 |
| அக்னியாறு | 183 | 180 | 16 | 16 | 285.80 | 245.40 |
| அம்புலியாறு | 104 | 104 | 17 | 17 | 80.85 | 80.85 |
| சுவேதாநதி | 18 | 17 | 33 | 33 | 73.80 | 73.80 |
| | **757** | **732** | **165** | **155** | **1091.62** | **978.83** |

## 3.1.4. கட்டம் – III (30 உப வடிநிலங்கள்) திட்டமிடப்பட்டுள்ள பணிகள் விவரம்.

| உப வடிநிலம் | புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏரிகளின் எண்ணிக்கை | | அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | | வரத்துக் கால்வாய்களின் நீளம் (கீ.மீல்) | |
| | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது | மொத்தம் | முடிவுற்றது |
| கோவிலாறு | 0 | 0 | 2 | 2 | 7.78 | 7.78 |
| மார்கண்டேய நதி | 3 | 3 | 9 | 7 | 20.00 | 1.50 |
| பாம்பனாறு – வரட்டாறு | 3 | 0 | 20 | 0 | 45.29 | 0.00 |
| துரிஞ்சலாறு | 70 | 11 | 26 | 1 | 145.76 | 51.50 |
| பாம்பாறு முதல் திருக்கோவிலூர் வரை | 54 | 54 | 0 | 0 | 90.13 | 90.13 |
| ஓங்கூர் | 165 | 41 | 10 | 2 | 352.82 | 80.65 |
| ஆரணியாறு | 164 | 0 | 1 | 0 | 213.47 | 10.25 |
| கம்பைநல்லூர் | 21 | 1 | 61 | 4 | 106.005 | 13.45 |
| நல்லாவூர் | 75 | 0 | 4 | 0 | 109.18 | 0.00 |
| கடிலம் | 86 | 0 | 13 | 0 | 262.65 | 0.00 |
| கோமுகி நதி | 68 | 0 | 43 | 0 | 189.98 | 0.00 |
| கொசஸ் தலையாறு | 262 | 0 | 0 | 0 | 448.582 | 0.00 |
| தேனியாறு | 11 | 0 | 11 | 0 | 17.44 | 13.48 |
| கீழ் குண்டாறு | 61 | 0 | 3 | 0 | 18.43 | 3.00 |
| தேவியாறு | 50 | 0 | 6 | 2 | 83.54 | 26.60 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வைப்பாறு பிராதன ஆறு | 22 | 0 | 2 | 0 | 0.00 | 0.00 |
| வேம்பாறு | 18 | 7 | 0 | 0 | 13.90 | 0.00 |
| நகரியாறு | 11 | 0 | 6 | 0 | 9.80 | 0.00 |
| சீவலப்பேரியாறு | 17 | 3 | 3 | 3 | 4.24 | 4.24 |
| காணல்ஓடை | 44 | 4 | 0 | 0 | 8.60 | 0.00 |
| வல்லம்பட்டி ஓடை | 5 | 0 | 1 | 1 | 1.10 | 1.10 |
| பாலாறு | 34 | 0 | 0 | 0 | 21.34 | 0.00 |
| உப்பதூராறு | 5 | 0 | 2 | 0 | 5.50 | 0.00 |
| கிருதுமால் | 113 | 0 | 7 | 0 | 152.37 | 73.07 |
| உப்போடை | 26 | 0 | 1 | 0 | 0.00 | 0.00 |
| சூலிக்குளம் ஆறு | 5 | 0 | 1 | 0 | 7.00 | 0.00 |
| கோரம்பள்ளம் ஆறு | 4 | 0 | 1 | 0 | 9.00 | 0.00 |
| கருமேனியாறு | 87 | 0 | 15 | 12 | 56.25 | 38.75 |
| அனுமா நதி | 84 | 15 | 8 | 0 | 83.39 | 11.40 |
| உத்திரகோச மங்கையாறு | 110 | 4 | 0 | 0 | 102.95 | 0.00 |
| **மொத்தம்** | **1678** | **143** | **256** | **34** | **2586.50** | **426.90** |

### 3.1.5. கட்டம் – IV (6 உப வடிநிலங்கள்) திட்டமிடப்பட்டுள்ள பணிகள் விவரம் (2011 – 2012)

| வ. எண் | உப வடிநிலம் | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட ஏரிகளின் எண்ணிக்கை | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வரத்துக் கால்வாய்களின் நீளம் (கீ.மீ.) |
|---|---|---|---|---|
| 1 | கூவம் | 60 | -- | 49.75 |
| 2 | அடையாறு | 146 | -- | 177.72 |
| 3 | செய்யாறு – கிள்ளியாறு | 453 | 2 | 688.11 |
| 4 | பரளையாறு | 89 | 1 | 121.72 |
| 5 | காயல்குடியாறு | 13 | 2 | 18.40 |
| 6 | அமராவதி | 92 | 10 | 257.21 |
| **மொத்தம்** | | **853** | **15** | **1312.91** |

### 3.1.6. 2011–2012 ஆம் ஆண்டிற்கான பணிகளின் நிலை

#### (i) மறுசீரமைப்புப் பணிகள்–கட்டம் I, II, மற்றும் III

இது வரை மொத்தம் **4069** ஏரிகள், **654** அணைக்கட்டுகள் மற்றும் **6745.79** கி.மீ நீளமுள்ள வழங்குகால்வாய்கள் மறுசீரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. **2011–2012** ஆம் ஆண்டில் **1837** ஏரிகள், **289** அணைக்கட்டுகள் மற்றும் **2898.77** கி.மீ நீளமுள்ள வழங்குகால்வாய்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு **225** ஏரிகள், **37** அணைக்கட்டுகள் மற்றும் **399.44** கி.மீ நீளமுள்ள வழங்குகால்வாய் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### (ii) மறுசீரமைப்புப் பணிகள்–கட்டம் IV

நான்காம் கட்டமாக **2011–2012** ஆண்டில் **853** ஏரிகள், **15** அணைக்கட்டுகள் மற்றும் **1312.91** கி.மீ நீளமுள்ள வழங்குகால்வாய்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.7. பாசன பங்கேற்பு மேலாண்மை

விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், திறனாக்கப் பயிற்சி அளிக்கவும், **26** கலந்தறிதற்குரிய அமைப்புகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக கட்டம் **1** மற்றும் **2** ல் ரூபாய் **15.14** கோடிகளுக்கும் மற்றும் கட்டம் **3** ல் ரூபாய் **11.95** கோடிகளுக்கும் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. **2011–2012** ஆம் ஆண்டில் **9** தொகுப்புகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள **17** தொகுப்புகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.1.8. தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் மேலாண்மை அமைப்பு

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத் துறையின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் மேலாண்மை அமைப்பு மூலம் நவீனப்படுத்துதல், இதன்மூலம் குறித்த நேரத்தில் கிடைக்கும் தகவல்கள் மூலம் நீர்வள ஆதாரத் துறையின் செயல்பாடுகளை திறம்பட மேம்படுத்தவும், சிறப்பாக திட்டமிடவும் மற்றும் கண்காணிக்கவும் இயலும் .

இப்பணிகளை செயல்படுத்திட ரூ.**42.4371** கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் அனைத்தும் எல்காட் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ.**15.81** கோடி.

இத்துறையில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளை மேம்படுத்த **1565** கணினிகளும், **330** மடிக்கணினிகளும், கணிப்பொறி சார்ந்த உபகரணங்களும் மற்றும் குறும்பரப்பு வலையமைப்பும் (LAN) **142** நீர்வளஆதாரத்துறை அலுவலகங்களில் அமைக்கப்பட்டது.

நீர்வள ஆதாரத் துறையின் அலுவலகங்களுக்கு ரூ.2.99 கோடி மதிப்பீட்டில் சிறுகட்டுமான பணிகள் (Minor Civil Works) மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

துணிவாண்மை தகவல் மேலாண்மை அமைப்பு (Enterprise Information Management System) வடிவமைத்து செயல்படுத்த எல்காட் நிறுவனம் மூலமாக டெக் மகேந்திரா (M/s Tech Mahindra) நிறுவனம் ரூ. 8.33 கோடிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீர்வள ஆதாரத் துறையின் தெரிவுசெய்யப்பட்ட 55 அலுவலகங்களை இணைக்கும் பெரும் வலை பரப்பை (WAN) தமிழ்நாடு மாநில பெரும் வலைப்பரப்பில் (TNSWAN) எல்காட் மூலமாக இணைக்கும் பணியினை மாநில நிதியில் செயல்படுத்த ரூ.1.685 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.9 பயிற்சி

நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.7.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தொழில்நுட்பங்கள் மூலம் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பாசன ஆதாரங்களின் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் – திருச்சி, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் – சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மற்றும் பிற மாநிலங்களில் உள்ள பயிற்சி நிலையங்கள் மூலமாகவும் பயிற்சிஅளிக்கப்பட்டு வருகிறது.

13.10.2008 அன்று முதல், பயிற்சிகள் தொடங்கப்பட்டு இதுவரை 198 தொழில்நுட்ப பயிற்சிகள், கணினி பயிற்சிகள், பங்கேற்பு பாசன மேலாண்மை பயிற்சிகள் மூலம் 3728 பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.282.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 3.1.10. கட்டுமான தரமேலாண்மை மற்றும் தொழில் நுட்ப மேற்பார்வைக்கான ஆலோசனைக் குழு

இவ்வாலோசனைக் குழுவிற்கான நிர்வாக ஒப்புதல் ரூ.9.78 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி வேப்கோஸ் (WAPCOS) நிறுவனம் மூலம் மேற்கொள்ள உடன்படிக்கை செய்யப்பட்டு 14.03.2011 அன்று பணிகள் தொடங்கப்பட்டன. இந்நிறுவனம் தள ஆய்வகம் மற்றும் நடமாடும்

ஆய்வகம் ஆகியவற்றை இருக்கன்குடி மற்றும் விழுப்புரத்தில் நிறுவியுள்ளது. மேலும் முதல், இரண்டு, மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களில் உள்ள உபவடிநிலங்களில் பணியின் தரத்தினை உறுதி செய்வதற்கு தள ஆய்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**3.1.11. மென்பொருள் அறிவியல் தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி**

நீர்வள ஆதாரத் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களுக்கு மென்பொருள் அறிவியல் தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.2.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் தற்போது AUTO CAD CIVIL 3D 2012, ARC GIS மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**3.1.12. சுற்றுச்சூழல் பணிகளின் நடவடிக்கை:—**

**(I) வெளிப்புற சுற்று சூழல் மற்றும் சமூக தணிக்கை கலந்தறிதல்**

நீர்வள நிலவள திட்டத்தில் உள்ள முதல் மற்றும் இரண்டாம் கட்ட உப வடிநிலங்களில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அமைப்பை தணிக்கை செய்வதற்கான ஆலோசனைக்குழுவினை தேர்வும் பணிக்கு ரூ.98.8 இலட்சம் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி செயலாக்கத்தில் உள்ளது.

மேலும் மூன்று மற்றும் நான்காம் கட்ட உபவடிநிலங்களில் மேற்கூறிய ஆலோசனைக் குழுவினை தேர்வு செய்வதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உலக வங்கின் ஒப்புதல் பெறும் பணி நடைபெற்று வருகிறது.

**(II) சுற்றுச்சூழல் பணிகளின் அறிக்கை**

நீர்வள நிலவள திட்டத்தில் உள்ள ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் கட்டங்களில் உள்ள உபவடிநிலங்களில் செப்டம்பர் 2011ம் ஆண்டு வரை உள்ள சுற்றுச்சூழல் செயல் விளைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது.

### 3.1.13. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)

தமிழக அரசால் மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை 13.04.2009 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமையின் நிறுவனச் செலவு மற்றும் அதன் செயலாக்கம் ஆகியவற்றுக்கென மார்ச் 2013 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கான செலவினத்திற்கு ரூ.271 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை ஜூன் 2011ல் முதல் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீராய்வு நிறுவனம், உறுப்பினர் செயலர், சுவர்மா தலைமையின் கீழ், நீராய்வு நிறுவனம், தரமணி வளாகத்தில் இயங்கி வருகிறது.

**நோக்கங்கள்:**

1. மாநிலத்தின் நீர்வள ஆதார அமைப்பை ஒழுங்குபடுத்த, நீர் இருப்பு மற்றும் தன்மை குறித்த விவரங்கள் சேகரித்து, பொதுவான தகவல் மையம் உருவாக்குதல்.

2. மாநிலத்தின் நீர்வள ஆதார கொள்கையை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு செய்து அதனை சட்டவடிவமாக்குதல்.

3. ஆற்றுப்படுகை வாரியம் மற்றும் பெரும் திட்டங்களை மறுஆய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.

**செயல்பாடுகள்:**

1. வைப்பாறு வடிநிலம் முன்னோடி வடிநிலமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. வைப்பாறு வடிநிலத்தின் தரவுகள் (Data) சார்பு துறைகளிடமிருந்து (Line Departments) மாநில நீர்வள மேலாண்மை முகமைக்காக சேகரிக்கப்பட்டு ஒருங்கிணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2. மாநிலத்தின் பல்வேறு துறைகளிடமிருந்து நீர்வளம் தொடர்பான 19 சட்ட விதிகள் சேகரிக்கப்பட்டு, அவற்றை பிற மாநிலங்களில் தற்போதுள்ள நீர்வளம் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்திசைவு செய்து, ஒருங்கிணைந்த மாநில நீர்வள மேலாண்மை முகமைக்கு வலுவான சட்ட அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

3. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமையின் நிர்வாகப் பிரிவினை மறுநிர்மாணம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.2. மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைத்தல்

### (அ) காவேரியாற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டம்

காவேரி ஆற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக காவேரியாற்றின் குறுக்கே தற்போதுள்ள கட்டளை படுகை அணையிலிருந்து 250 மீட்டருக்கு கீழே புதிதாக ஒரு கதவணை அமைக்கும் பணிக்கு ரூ.234 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

கட்டளை படுகை அணையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய 4 பாசன கால்வாய்களின் நீர் நிர்வாகத்தை மேம்படுத்தி முறைப்படுத்த புதிதாக கட்டப்பட்டு வரும் கதவணை உதவிகரமாக இருக்கும். இதன் மூலம் பருவமழைக் காலங்களில் 1.04 டி.எம்.சி.அடி நீரை தேக்கி வைக்க இயலும்.

### (ஆ) கன்னடியன் கால்வாயிலிருந்து ஒரு புதிய வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து வறட்சிபகுதிகளான சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை பயன்பெற தாமிரபரணியாற்றினை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டம்

கன்னடியன் அணைக்கட்டின் கால்வாயிலிருந்து வரும் உபரி நீரினை கன்னடியன் வாய்க்காலிலிருந்து வறட்சிக்கு இலக்காகும் சாத்தான்குளம், திசையன்விளை மற்றும் எம்.எல்.தேரி மணற்காடு வரையில் கொண்டு செல்வதற்காகவும், வழியிலே மணிமுத்தாறு வாய்க்காலில் நீர் பற்றாக்குறை உள்ள மூன்று மற்றும் நான்காம் பகுதிகளுக்கு நீர் வழங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தினால் தாமிரபரணியாற்றின் கிளை ஆறுகளான பச்சையாறு, கொடுமுடியாறு, கருமேனியாறு மற்றும் நம்பியாறு ஆகியவை இணைக்கப்படும்.

இத்திட்டத்தில் கன்னடியன் அணைக்கட்டை மேம்படுத்துதல், கன்னடியன் கால்வாயினை **6.5** கி.மீ நீளத்திற்கு அகலப்படுத்தி மேம்படுத்துதல், **73** கி.மீ நீளத்திற்கு புதிய வெள்ள நீர் கால்வாய் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை **4** கட்டங்களாகப் பிரித்து செயல்படுத்த ரூ.**369** கோடி மதிப்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் **17002** எக்டேர் புதிய விளை நிலங்கள் பயனடைவதோடு மொத்தம் **23040** எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## 3.3. மாநில நிதிப் பணிகள்

**பரம்பிக்குளம், ஆழியாறு திட்டப்பகுதியில் எல்.எஸ். 0 கி.மீ முதல் எல்.எஸ். 49.30 கிமீ வரை சமமட்ட கோட்டுக் கால்வாயை நவீனப்படுத்துதல்**

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் முதுகெலும்பான சமமட்டக் கோட்டுக் கால்வாய் சர்க்கார்பதி மின் நிலையத்திலிருந்து துவங்கி பள்ளத்தாக்குகளையும் சுரங்கங்களையும் **49.30** கி.மீ கடந்து திருமூர்த்தி நீர்த்தேக்கத்தை அடைகிறது. இதன் புவியியல் அமைப்பு மற்றும் **50** ஆண்டுகால இயக்கத்தினால் இக்கால்வாய் பல்வேறு சிதைவிற்கு உட்பட்டு இதன் கட்டமைப்பு நிலை மற்றும் நீர் கொண்டு செல்லும் திறனை இழந்துள்ளது.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப்பகுதியில் சமமட்ட கோட்டுக் கால்வாயை எல்.எஸ். **0** கி.மீ முதல் எல்.எஸ். **49.30** கிமீ வரை நவீனப்படுத்த ரூ.**184.50** கோடிக்கு **11/2010** இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு **3/2011** இல் பணிகள் துவங்கப்பட்டன. இப்பணி **3** கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் ஏற்கனவே உள்ள **1.72** இலட்சம் ஆயக்கட்டு பயனடைவதுடன் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் பயனடைவார்கள். **8** விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் **2013–2014** இல் முடிக்கப்படும்.

**கடலூர் மாவட்டத்தில் புதிய வீராணத்தை மேம்படுத்தி குடிநீர் வழங்குதல்**

சென்னை குடிநீர் வழங்கு வாரியம், நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு வழங்குகிறது. புதிய வீராணம் திட்டத்திற்கு 1993–இல் ரூ. 60 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் 7/1997இல் துவங்கப்பட்டன. இத்திட்டத்தில் கரைகளைப் பலப்படுத்துதல், கால்வாய்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ.106.35 கோடிக்கு 2009இல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் 27 பணிகளில் 10 பணிகள் முடிவுற்றும் 17 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

**தருமபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல்**

தருமபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைக்கும் பணிக்காக 2001–இல் ரூ.14.15 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் 03/2005–இல் துவங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தம் 6/2007–இல் முன்னதாக முடிவுக்கு வந்தது. மீதமுள்ள பணிகள் ரூ.3.85 கோடி என மதிப்பீட்டில் 6/2008–இல் தொடங்கப்பட்டு 93 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தின் மூலம் 446 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைத்தல்**

வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைக்க ரூ.29.50 கோடிக்கு 1997–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 12/2007–ல் பணிகள் துவங்கப்பட்டன. தற்போது 31 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பணி முன்னேற்றம் தாமதமாக நடைபெற்றதால் ஒப்பந்தம் 2/2009–இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஒப்பந்தக்காரர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணையை தாக்கல் செய்துய்ளயார். இதில் இறுதி தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1125 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும்.

**மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல்**

வைகை ஆற்றின் வெள்ள நீரை திருப்பிவிட்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கு ரூ.33.81 கோடிக்கு 1996 –இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 7/1999–இல் பணிகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்தில் இரண்டு புதிய ஏரிகளும் அமைக்கப்படவுள்ளன. திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ. 74.60 கோடிக்கு 2006–இல் வழங்கப்பட்டன. ரூ.82.67 கோடிக்கு திருத்திய மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுவரை 96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொட்டிப்பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் 925 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

**முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வைகை அணைக்கு அதிகப்படியான நீர் கொண்டு செல்ல ஏதுவாக பெரியாறு ஏரியின் வழங்கு வாய்க்காலில் தேக்கடி தலை மதகில் உள்ள சுரங்க நுழைவாயிலின் மேல்புறம்**
**130 மீட்டரில் புதிய கூளம் தடுக்கும் அமைப்பு (Trash Rack) செய்தல்**

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வைகை அணைக்கு அதிகப்படியான நீர் கொண்டு செல்ல ஏதுவாக பெரியாறு ஏரியின் வழங்கு வாய்க்காலில் தேக்கடி தலை மதகில் உள்ள சுரங்க நுழைவாயிலின் மேல்புறம் 130 மீட்டரில் புதிய கூளம் தடுக்கும் அமைப்பு (Trash Rack) செய்ய ரூ. 59 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது பிரதான கால்வாயின் தலை மதகில் உள்ள தடுப்பான் அமைப்பானது போதுமானதாக இல்லாததாலும் கழிவுப் பொருட்கள் தடுப்பான் மீது குவிந்து விடுவதால் தண்ணீர் வரத்து குறைவதைத் தடுக்கவும் புதிய தடுப்பான் அமைப்பினை தலை மதகிலிருந்து 130 மீட்டர் தொலைவில் தேக்கடியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 90 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் காளிமார் பாலத்தில் இருந்து சைமன் காலனி பாலம் வரை பாலம் கட்டுதல், தடுப்புசுவர் அமைத்தல் மற்றும் தார்சாலை அமைத்தல்**

இத்திட்டப் பணிக்கு ரூ. 2.94 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பாலம் கட்டப்படுவதன் மூலம் அருகிலுள்ள பொது மக்கள் தங்களது

உடைமைகளை இடர்பாடின்றி எதிர்ப்புறம் கொண்டு செல்வதற்கும் அபாய காலங்களில் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கும் பயன்படும். இதுவரை 10 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன

**பேபி அணை மற்றும் பெரியாறு அணையில் 150 மி.மீ விட்டத்தில் நெடுக்கை துளையிட்டு பரிசோதனைக்காக மண் மாதிரி எடுத்தல்**

முல்லைப் பெரியாறு அணையின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பை ஆராய்வதற்கு அணையின் மேல் பகுதியில் துளையிட்டு மாதிரி படிவங்களை எடுப்பதற்கு உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு முடிவு செய்தது. இதன் தொடர்ச்சியாக ஒருங்கிணைக்கும் குழுவானது பிரதான அணை, பேபி அணையில் துளையிட்டு மாதிரிகளை எடுத்து நீர் இழப்பு, காமா காமா, உருளை பளுதூக்கும் சோதனை, மீளும் தன்மை, சுருங்கும் தன்மை ஆகிய சோதனைகளை தரமான பரிசோதனைக் கூடம் மூலம் ஆய்வு செய்ய முடிவு செய்தது.

இதற்கு அரசானது முல்லைப் பெரியாறு அணையின் மேற்பரப்பில் 150 மி.மீ. விட்டமுள்ள துளைகளை இடுவதற்கு ரூ.88 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, பிரதான அணையின் நெடுக்கையில் 300’, 475’ (NX), 780’ (NX), 910’, மற்றும் பேபி அணையின் நடுப்பகுதியில் நெடுக்கை 120’ அளவில் துளையிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. துளையிடப்பட்டு சேகரிக்கப்பட்ட மாதிரி படிவங்கள் CWRPRS, புனே ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்வில் உள்ளது. நீர் இழப்புத் தன்மையைப் பரிசோதனை செய்ய அணையில் துளையிட்டு மாதிரி படிவங்களை எடுப்பதற்கு மகாராஷ்டிரா அரசின் இயந்திரவியல் கோட்டம் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரிகளை எடுப்பதற்கு தனி core barrel பயன்படுத்தப்படும். ஆனால் தரமான சுண்ணாம்புக்கல் மாதிரிகளை எடுப்பதற்கு இரட்டை core barrel பயன்படுத்தப்படுகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

**பேபி அணை மற்றும் முல்லைப் பெரியாறு அணையின் பிரதான அணையில் மேல் புறத்திலிருந்து சுரங்கம் மற்றும் அணைக்கட்டு கதவு வழியாக அடித்தளம் வரை 150 மி.மீ விட்டத்தில் துளையிட்டு அழுத்தகாரையூட்டு செய்தல்.**

கேரள அரசின் பொறியாளர்கள் வலியுறுத்துவதால் அதிகாரம் அளிக்கும் குழுவின் உறுப்பினர் மற்றும் ஓய்வு பெற்ற மத்திய நீர்க் குழுமத்தின்

தலைவர் ஆகியோர்களால் முல்லைப் பெரியாறு அணையின் பிரதான அணை மற்றும் பேபி அணையில் 150 மிமீ விட்டத்தில் துளையிட்டு அதே இடத்தில் பரிசோதனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. காவேரி தொழில்நுட்ப பிரிவின் தலைவர் துளையிடப்பட்ட துளைகளை சிமெண்ட் கலவை மூலம் நிரப்பும்படி அறிவுறுத்தியுள்ளார்.

பேபி அணை மற்றும் முல்லைப் பெரியாறு அணையின் பிரதான அணையில் மேல் புறத்திலிருந்து சுரங்கம் மற்றும் அணைக்கட்டு கதவு வழியாக அடித்தளம் வரை 150 மி.மீ விட்டத்தில் துளையிட்டு அழுத்தகாரையூட்டு செய்வதற்கு ரூ.50 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**2011–2012 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ள புதிய திட்டப் பணிகள்**

- சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் சோழவரம், செங்குன்றம், பூண்டி மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தும் பணிக்காக ரூ.19.22 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், காவேரி ஆற்றின் இடது கரை மைல் 119 / 0 முதல் 123/2 வரை (ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால் முதல் அம்மா மண்டபம் வரை) தடுப்புசுவர் மற்றும் கற்காரை பலகை பதிக்கும் பணிக்காக ரூ.1.60 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 3.4. நபார்டு திட்டங்கள்

**கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 23 நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்**

கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் குறிப்பாக திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் நகரப் பகுதிகளில் காவேரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளை நிரந்தரமாகத் தடுப்பதற்கான 23 பணிகளுக்கு ரூ.207.54 கோடிக்கு 2008–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 1/2009–இல் பணிகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் காவேரி ஆற்றின் கரைகளை பலப்படுத்தி தரப்படுத்தவும், கொள்ளிடம் ஆற்றின் கரைகளை நிரந்தர வெள்ள பாதுகாப்பு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளன. மொத்தம் 23 பணிகளில் 19 பணிகள்

முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 4 பணிகள் 2012–13 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**தருமபுரி மாவட்டம் ஜெர்தலாவ் வாய்க்காலுக்கு வரத்து வாய்க்கால் அமைத்தல்**

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஜெர்தலாவ் வாய்க்காலின் தொட்லாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் 15 இதர ஏரிகள் பயன்பெறும் வகையில் வரத்து கால்வாய் அமைக்க ரூ.6.29 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் சின்னார் அணையிலுள்ள வெள்ள நீரை ஜெர்தலாவ் வாய்க்காலுக்கு திருப்பி விடுவதாகும். இதுவரை 69 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம்330 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும்.

**ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களை புனரமைத்தல்**

ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களை புனரமைக்க ரூ. 17.45 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பிப்ரவரி 2011–ல் பணிகள் தொடங்கப்பட்டன. இதுவரை 72 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பழுதடைந்த மதகுகள், திருகு மரை கதவுகள் (Screw Gearing Shutters), குறுக்கு வடிகால்கள் ஆகியவை மறுகட்டமைப்பு செய்யப்படவுள்ளன. கொடிவேரி அணைக்கட்டு அமைப்பின் கீழ் இவ்விரு கால்வாய்களின் மூலம் 9917 எக்டேர் பாசன வசதி பெறும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் தோவாளை மற்றும் இராதாபுரம் கால்வாயினை புனரமைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் தோவாளை மற்றும் இராதாபுரம் கால்வாயினை புனரமைக்க ரூ.22.50 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு 2/2011–ல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இப்பணி 9 கட்டங்களாக பிரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன. கால்வாயின் தளம் மற்றும் பக்கங்களில் அகவுறை அமைத்தல், பாதுகாப்பு சுவற்றினை சீரமைத்தல், மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல் ஆகியவை உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதுவரை 40 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 5207.60 எக்டேர் ஆயக்கட்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 6879.80 எக்டேர் ஆயக்கட்டும் பயன்பெறும்.

**தேனி மாவட்டத்தில் பாளையம்பரவு மற்றும் பி.டி.ராஜன் வாய்க்கால்களை புனரமைத்தல்**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், பெரியார் வைகை வடிநிலத்தில் கம்பம் பள்ளத்தாக்கு அமைப்பின் 5–வது கால்வாயான பாளையம்பரவு வாய்க்கால் சுருளியாற்றில் எல்.எஸ் 23.56 கி.மீ தூரத்தில் வலது கரையில் அமைந்துள்ளது. பாளையம்பரவு மற்றும் பி.டி.ராஜன் வாய்க்கால்களை புனரமைக்க ரூ.10.08 கோடிக்கு 2010 –ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு 10/2010–ல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பாளையம்பரவு வாய்க்காலின் நீர் கொண்டு செல்லும் திறனை வினாடிக்கு 90 கன அடி முதல் 150 கன அடி வரை அதிகரிக்கவும் மற்றும் பி.டி. ராஜன் மாற்று வழி கால்வாயின் திறனை வினாடிக்கு 70 முதல் 100 கன அடியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் இவ்விரண்டு கால்வாய்களுக்கும் நீர் கொண்டு செல்லும் திறன் அதிகரிக்கப்படுகிறது. இதுவரை 64 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தேனி மாவட்டத்தில் 3070 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும்.

**இராமநாதபுரம் மாவட்டம் களரி வாய்க்காலுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே மந்திவலசை அருகே படுகை அணை அமைத்தல்**

இராமநாதபுரம் மாவட்டம் களரி வாய்க்காலுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே மந்திவலசை அருகே படுகை அணை அமைப்பதற்கு ரூ.14.20 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 68 ஏரிகளுக்கு வெள்ள நீர் திருப்பிவிடப்படுவதால் விடுபட்ட ஆயக்கட்டு பயன் அடையும். இதுவரை 89 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 4007 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும்.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் பெரிய ஏரியை புதுப்பித்தல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் பெரிய ஏரியை புதுப்பிக்க ரூ. 9.73 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு 10/2010–ல் பணிகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் பெரிய ஏரியின் 1604 எக்டேர் பாசனப் பரப்பு நிலைநிறுத்தப்படுவதுடன் ஏரியின் கொள்ளளவு பெருமளவில் உயர்த்தப்படும். அணைக்கட்டின்

கதவுகளை புதுப்பித்தல், தெற்கு மதகுகளை புதுப்பித்தல், ஏரியின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் முன் பக்க கரைகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல், மதகுகளை புதுப்பித்தல், இராமநாதபுரம் பெரிய ஏரியின் வழங்கு வாய்க்கால் மற்றும் தொருவள்ளூர் வழங்குவாய்க்கால்களை தூர்வாருதல், வைகை ஆற்றின் வெள்ளப்பகுதி கரைகளை பலப்படுத்துதல், சுரங்க வழிப்பாதையை சீரமைப்பு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன. 92 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்**

திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றில் 4 நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ரூ. 45.60 கோடிக்கு 2008–இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 02/2009 –இல் பணிகள் துவங்கப்பட்டன. இப்பணியை நபார்டு ரூ. 46.90 கோடிக்கு 4 பணிகளாக செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ. 47.02 கோடிக்கு 02/2012–இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1 பணி முழுமையாக முடிக்கப்பட்டு விட்டது, 1 பணி நடைபெற்று வருகிறது மற்றும் 1 பணி நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

எஞ்சிய 1 பணி செயலாக்கத்திற்காக 4 பணிகளாக பிரிக்கப்பட்டு அதில் 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. 1 பணியில் நில கையகப்படுத்தும் பணிகள் வருவாய்துறையின் பரிசீலனையில் உள்ளது.

**மதுரை மாவட்டம் நிலையூர் கால்வாயினை புனரமைத்தல்**

மதுரை மாவட்டம், நிலையூர் கால்வாயினை புனரமைத்து அதன் நீர் கடத்தும் திறனை அதிகரித்து நிலையூர் விரிவுபடுத்தப்பட்ட கால்வாய்க்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.23.50 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வைகையாற்றின் வெள்ளநீர் நிலையூர் கால்வாய் வழியாக திருப்பிவிடப்பட்டு அதன் மூலம் நிலையூர் விரிவுபடுத்தப்பட்ட கால்வாயின் தொடக்கப்பகுதியில் தேவைப்படும் 654 கன அடியை பூர்த்தி செய்து மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 94 வறண்ட கண்மாய்களுக்கு நீர் வழங்கப்படும். 94 கண்மாய்களை உள்ளடக்கிய இவ்விரிவுபடுத்தப்பட்ட கால்வாயின் பாசனப் பரப்பு 4027 எக்டேர் ஆகும். (மதுரை மாவட்டத்தில் 50 கண்மாய்கள், விருதுநகர் மாவட்டத்தில் 21 கண்மாய்கள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 23 கண்மாய்கள்). இப்பணி பிப்ரவரி 2011 ல் துவங்கப்பட்டு 34 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன.

**புதுக்கோட்டை மாவட்டம், தண்டலை கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பாசன வசதி பெறும் வகையில் மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக புதிய அணை கட்டு அமைத்தல்**

புதுக்கோட்டை மாவட்டம், தண்டலை கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பாசன வசதி பெறும் வகையில் மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக புதிய அணை கட்டு அமைப்பதற்கு ரூ. 2.50 கோடிக்கு 2011 –இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பிப்ரவரி 2011–இல் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 80 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 154 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்களை மேம்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்களை மேம்படுத்துவதற்கு ரூ. 3 கோடிக்கு 2011 –இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2/2011–இல் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 448 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**காஞ்சிபுரம் மாவட்டம் நீஞ்சல்மடுவு அணைக்கட்டை மீண்டும் கட்டுதல் மற்றும் பொன்விளைந்தகளத்தூர் கால்வாயினை சீரமைத்தல்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாற்றின் துணை நதியான நீஞ்சல்மடுவு சிற்றாற்றின் குறுக்கேயுள்ள நீஞ்சல்மடுவு அணைக்கட்டை மீண்டும் கட்டுதல் மற்றும் பொன்விளைந்தகளத்தூர் கால்வாயினை சீரமைப்பதற்கு ரூ. 9 கோடிக்கு 2011 –இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 3/2011–இல் பணிகள் தொடங்கப்பட்டன. கால்வாயினை தூர்வாரவும், பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 2105 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தையம் கிராமத்தில் உள்ள நல்லத்தங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தையம் கிராமத்தில் நல்லத்தங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைப்பதற்கு ரூ.6.97 கோடிக்கு 2010–இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பிப்ரவரி 2011–இல் பணிகள் தொடங்கப்பட்டன. இதுவரை 80 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தால் நிலத்தடி நீரை செறிவூட்டுதல் மூலம் 25 கி.மீ. சுற்றுப்பரப்பிலுள்ள கிணறுகள் பயனடையும். இதன் மூலம் 327 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**தூத்துக்குடி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ளே ஸ்ரீவைகுண்டம் அணைகட்டின் தெற்கு பிரதான கால்வாய் மற்றும் அதன் கீழுள்ள ஏரிகளை புனரமைத்தல்**

தூத்துக்குடி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ளே ஸ்ரீவைகுண்டம் அணைகட்டின் தெற்கு பிரதான கால்வாய் மற்றும் அதன் கீழுள்ள ஏரிகளை புனரமைப்பதற்கு ரூ.10 கோடிக்கு 03/2011 –இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்று திட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு தான் கடைசி அணைக்கட்டாகும். நீர் இழப்பு, வெள்ள சேதம் ஆகியவை தடுக்கப்படுவதுடன் அணைக்கட்டின் செயல்பாட்டு திறன் அதிகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 5164 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**கடலூர் மாவட்டம், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே உள்ள விருத்தாசலம் அணைக்கட்டை விரிவுபடுத்தி புனரமைத்தல்**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே உள்ள விருத்தாசலம் அணைக்கட்டை விரிவுபடுத்தி புனரமைக்கும் பணிக்காக ரூ.13 கோடிக்கு 2011 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு மார்ச் 2012–இல் பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் 25300 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**மதுரை மாவட்டத்தில் பத்தாவது கிளைக்கால்வாயை மேம்படுத்துதல் மற்றும் சுண்ணாம்பூர் பகிர்வுக்கான மாற்றுக் கால்வாய் அமைத்தல் மற்றும் அதனை சார்ந்த 12 கண்மாய்களை நவீனபடுத்துதல்**

மதுரை மாவட்டத்தில் பத்தாவது கிளைக்கால்வாய் மற்றும் சுண்ணாம்பூர் பகிர்வுக்கான மாற்றுக் கால்வாய் அமைக்கவும் அதனை சார்ந்த 12 கண்மாய்களை நவீனபடுத்தவும் ரூ.10 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பத்தாவது கிளைக்கால்வாய் மற்றும் சுண்ணாம்பூர் வழங்கு கால்வாயின் பகிர்விலிருந்து மாற்றுக்கால்வாய் அமைத்தல் மற்றும் பத்தாவது கிளைக்கால்வாய் மற்றும் சுண்ணாம்பூர் வழங்கு கால்வாயில் உள்ள 12 ஏரிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 2012இல் பணிகள் தொடங்கப்பட்டு

முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் மதுரை மாவட்டத்தில் **5013.51** எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**மதுரை மாவட்டத்தில் கொண்டம்வாரி ஓடையில் வெள்ளத் தடுப்பு பணிகள் மற்றும் பழுதடைந்த அணைக்கட்டுகள் மற்றும் கண்மாய்களின் கலிங்குகளைப் புனரமைத்தல்**

மதுரை மாவட்டத்தில் கொண்டம்வாரி ஓடையில் வெள்ளத் தடுப்பு பணிகள் மற்றும் பழுதடைந்த அணைக்கட்டுகள் மற்றும் கண்மாய்களின் கலிங்குகளைப் புனரமைக்கும் பணிக்காக ரூ.**10** கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் **2012**இல் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் **1923.33** எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் பேரணை மதகினை பழுது பார்த்து துருப்பிடித்த கதவுகளை சரி செய்யவும், பெரியாறு பிரதானக் கால்வாயின் தலை மதகினை மறுகட்டுமானம் செய்து அடைப்பான்களைச் சீரமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் பேரணை மதகினை பழுது பார்த்து துருப்பிடித்த கதவுகளை சரி செய்யவும், பெரியாறு பிரதானக் கால்வாயின் தலை மதகினை மறுகட்டுமானம் செய்து அடைப்பான்களைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.**3** கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அடைப்பான்களை பழுது நீக்கம் செய்தல், இரும்பு கயிறு மற்றும் கல் உருளைகளை மாற்றவும், பல் சக்கரங்களை பழுது நீக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் **2012**இல் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன.

**கடலூர் மாவட்டம் பெரிய ஓடையின் குறுக்கே படுகை அணை கட்டுதல்**

கடலூர் மாவட்டம் பெரிய ஓடையின் குறுக்கே படுகை அணை கட்டும் பணிக்காக ரூ.**5.50** கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் **2012**இல் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதியின் அருகே தலை மதகும் மாற்று படுகை அணையும் அமைத்து பெரிய ஓடையிலிருந்து விருத்தாசலம் தெற்கு பிரதான கால்வாய் வரை தண்ணீர் விட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் **1700** எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**கிருஷ்ணகிரி மாவட்டம் தளி பெரிய ஏரியை புனரமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி பெரிய ஏரியை புனரமைக்கும் பணிக்காக ரூ.2.30 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏரி கரை மற்றும் உபரி நீர்ப்போக்கியை நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 2012இல் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் 44.13 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் கீழ்பவானி கால்வாயில் அடைப்பான்கள் அமைத்தல்**

ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் கீழ்பவானி பிரதான கால்வாயில் மைல் 0/0 முதல் 124–2–560 வரையிலும் கிளைக்கால்களில் உள்ள அனைத்து மதகுகளிலும் அடைப்பான்கள் அமைக்கும் பணிக்காக ரூ.3 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2012இல் துவங்கப்பட்டு 10% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 83772 எக்டேர் ஆயக்கட்டு இதன் மூலம் பயனடையும்.

**தருமபுரி மாவட்டம், வாணியார் சிறுவடிநிலம், கல்லார் ஆற்றின் குறுக்கே உள்ள 16 அணைக்கட்டை சீரமைத்தல்**

தருமபுரி மாவட்டம், வாணியார் சிறுவடிநிலம், கல்லார் ஆற்றின் குறுக்கே உள்ள 16 அணைக்கட்டை சீரமைக்கும் பணிக்காக ரூ.2.15 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டை புனரமைத்து மேம்படுத்துவதன் மூலம் விடுப்பட்ட தற்காலிக ஆயக்கட்டில் 70 விழுக்காடு பயனடையும். மார்ச் 2012இல் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் 525 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், விருப்பம்பட்டி குளம் முதல் பாலேதோட்டம் குளம் மற்றும் 4 குளம் மற்றும் குட்டை ஆகியவற்றிற்கு வழங்கு வாய்க்கால் அமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், விருப்பம்பட்டி குளம் முதல் பாலேதோட்டம் குளம், மற்றும் 4 குளம், குட்டை ஆகியவற்றிற்கு வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்காக ரூ.1.75 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பெண்ணையாற்றில் உள்ள 5.28 மில்லியன் கனஅடி உபரி வெள்ள நீரை விருப்பம்பட்டி ஏரியில் இருந்து வழங்கு கால்வாய்

தோண்டி பாலேதோட்டம் ஏரி, 4 ஏரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு குளம் பயனடைய திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 2012இல் பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. இதன் மூலம் 83.80 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**2012–2013 ஆண்டில் தொடங்கப்படவுள்ள பணிகள்**

- திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே வயலூர் சாலை அருகே உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிக்காக ரூ.2.80 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

- பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமத்தில் விஸ்வகுடி அருகில் கல்லார் ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் பணிக்காக ரூ.19 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 348 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சேவூர் கிராமத்தின் அருகில் கமண்டலநாக நதியின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைத்து இரும்பேடு மற்றும் பையூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் பணிக்காக ரூ.2 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 351 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்திலுள்ள 28 ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க பாலேகுளி ஏரியிலிருந்து புதிய கால்வாய் அமைக்கும் பணிக்காக ரூ. 6.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 346 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் கிராமத்தில் உள்ள மேல்மங்கலம் வழங்கு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணிக்காக ரூ. 4 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 176.80 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானபட்டி கிராமத்தில் மஞ்சளாறு அணையின் வலது பிரதானக் கால்வாயை நவீனப்படுத்தும் பணிக்காக ரூ.2.76 கோடிக்கு ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 758.29 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- தேனி மாவட்டம், ஜெயமங்கலம் கிராமத்தில் ஜெயமங்கலம் வழங்கு வாய்க்காலை நவீனபடுத்தும் பணிக்காக ரூ. 3.75 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 375.91 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமராவதி ஆற்றுப்பாசன திட்டத்தில் உள்ள 16 பழைய அணைக்கட்டை புனரமைக்கும் பணிக்காக ரூ.18 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 6154.65 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- வேலூர் மாவட்டம், சித்தாத்தூர் கிராமத்தில் மோர்தானா வலது பிரதானக் கால்வாயை புனரமைக்கும் பணிக்காக ரூ.1.40 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1378 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

- காஞ்சிபுரம் மாவட்டம், கிளியனூர் கிராமம், செம்பூண்டி அணைக்கட்டினை சீரமைக்கும் பணிக்காக ரூ.2.20 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 523.36 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

## 3.5. பகுதி II திட்டங்கள் 2011–2012

பகுதி II திட்டத்தில் இந்த ஆண்டில் (2011 -2012) 40 திட்டப் பணிகள் ரூ.6.84 கோடிக்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் 27 திட்டப்பணிகள் முடிக்கப்பட்டன. கீழ்காணும் 13 பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடியில் உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டுதல். | 15.00 | 80 விழுக்காடு பணி முடிவுற்றது. |

| | | | |
|---|---|---|---|
| 2 | கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடியில் 4 பாசன உதவியாளர் குடியிருப்புகள் கட்டுதல். | 18.00 | 80 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 3 | கடலூர் மாவட்டம், பண்ரூட்டி வட்டம், திருவதிகை அணைக்கட்டில் 4 பாசன உதவியாளர் குடியிருப்புகள் கட்டுதல் | 18.00 | 80 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 4 | வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் கண்காணிப்புப் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல். | 30.00 | 90 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 5 | வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காட்பாடியில் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உதவி செயற் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் | 18.00 | 90 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 6 | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், குடியாத்தத்தில் உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் | 11.00 | 90 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 7 | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடியில் உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் | 11.00 | 80 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 8 | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், குடியாத்தம் பாசன பிரிவு அலுவலக கட்டடம் கட்டுதல் | 7.00 | 90 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 9 | வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம் சோளிங்கர் பாசன பிரிவு அலுவலக கட்டடம் கட்டுதல் | 7.00 | 80 விழுக்காடு பணி முடிவுற்றது. |

| | | | |
|---|---|---|---|
| 10 | ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயின் குறுக்கே மைல் கல் **65–6–200** ல் பாலம் கட்டுதல் | **60.00** | பணி நடைபெற்று வருகிறது. |
| 11 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தம பாளையத்தில் ஆய்வு மாளிகையை மறு சீரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | **25.00** | 75 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 12 | மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் பொதுப்பணித் துறை வளாகத்தில் பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் எண் 1, மதுரை பாசனப்பிரிவு எண் 1 மற்றும் பாசனப் பிரிவு எண் 2, மதுரை பெரியாறு வைகை வடிநில உப கோட்டத்தின் நிலையூர் மற்றும் வைகை அலுவலக கட்டடங்கள் கட்டுதல் | **30.00** | 70 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| 13 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், இராமேஸ்வரத்தில் பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை கட்டுதல் | **35.00** | 70 விழுக்காடு பணி முடிவுற்றது. |
| | **மொத்தம்** | **285.00** | |

## 3.6. வெள்ள தணிப்பு திட்டங்கள்

### 3.6.1. வெள்ள மேலாண்மை திட்டம்

வெள்ள மேலாண்மைத்திட்டம், மத்திய–மாநில அரசின் பங்களிப்புடன் செயலாக்கப்படும் திட்டமாகும். இதற்கு மத்திய–மாநில அரசுகளின் நிதிப் பங்கீட்டு விகிதம் **75:25** ஆகும். இத்திட்டத்தின்மூலம் பின்வரும் திட்டப்பணியானது தற்பொழுது நடைபெற்று வருகிறது.

**தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட பகுதிகளில் ஓடும் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளத் தடுப்பு பணிகள். திட்ட மதிப்பீடு ரூ.375.90 கோடி.**

தமிழகத்தில் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் பின்வருமாறு 21 தொகுப்புகளாக செயலாக்கப்படுகிறது.

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றில் கல்லணை முதல் கீழ் அணை வரை (எல்.எஸ். 26.74 கி.மீ. முதல் எல்.எஸ். 108.21 கி.மீ. வரை) வலது கரையினை மேம்படுத்துதல் – திட்ட மதிப்பீடு ரூ.95.97 கோடி – 7 தொகுப்புகள்.

(ஆ) கடலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றில் கீழணை முதல் கடலில் சேருமிடம் வரை (எல்.எஸ். 108.21 கி.மீ முதல் எல்.எஸ். 168.21 கி.மீ. வரை) உள்ள வலது கரையினை தரப்படுத்தியும், பலப்படுத்தியும் நிரந்தர வெள்ளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல். திட்ட மதிப்பீடு ரூ.171.45 கோடி – 7 தொகுப்புகள்.

(இ) கடலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றில் கீழணை முதல் கடலில் சேருமிடம் வரை (எல்.எஸ்.108.21 கி.மீ முதல் எல்.எஸ். 168.21 கி.மீ. வரை) உள்ள இடது கரையினை தரப்படுத்தியும், பலப்படுத்தியும் நிரந்தர வெள்ளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல். திட்ட மதிப்பீடு ரூ.108.48 கோடி – 7 தொகுப்புகள்.

மேற்கண்ட 21 தொகுப்புகளில் 19 தொகுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 தொகுப்புகளான நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் பனங்காட்டன்குடி பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் எல்.எஸ். 136.50 கி.மீ முதல் எல்.எஸ். 138.20 கி.மீ. வரை உள்ள வலது கரையில் நங்கூரமிடப்பட்ட தாள்களை கொண்டு (Anchored Sheet Piles) வெள்ளப் பாதுகாப்பு பணிகள் (தொகுப்பு எண் X) ரூ. 38.25 கோடி திட்ட மதிப்பீட்டிலும் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டம் அளக்குடி கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் எல்.எஸ். 161.80 கி.மீ முதல் எல்.எஸ். 163.00 கி.மீ. வரை உள்ள வலது கரையில் நங்கூரமிடப்பட்ட தாள்களை கொண்டு (Anchored Sheet Piles) வெள்ளப் பாதுகாப்பு பணிகள் (தொகுப்பு எண் XIII) ரூ.53 கோடி திட்ட மதிப்பீட்டிலும் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டம் 2012–13–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டபின் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 17 இலட்சம் மக்கள் மற்றும் 193 கிராமங்கள் பாதுகாக்கப்படும்.

## 3.6.2. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு குழுமம் (JNNURM)

சென்னை மாநகரில் வெள்ள பாதிப்பினைத் தவிர்க்கும் பொருட்டு சிறிய மற்றும் பெரிய வடிகால்களைச் சீரமைக்கும் பெருந் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.1447.91 கோடியாகும். மூன்று ஆண்டுகால அவகாசத்தில் இந்த மத்திய மாநில அரசின் பங்கீட்டு திட்டம் 2010–இல் துவங்கப்பட்டது.

பெரிய வடிகால்களான பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், கூவம் மற்றும் அடையாறு ஆகியவற்றைச் சீரமைக்கும் பணிகள் ரூ.633.03 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதாரத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் 10 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, 7 தொகுப்புகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நடைபெற்று வரும் பணிகள்:**

| தொகுப்பு | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| I | கொடுங்கையூர் வடிகால், ஓட்டேரி நல்லா மற்றும் கொளத்துார்–மாதவரம் மாற்றுக் கால்வாயை மேம்படுத்துதல். | 4 | 63.05 | 41 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது |
| II | அரும்பாக்கம்–விருகம்பாக்கம் வடிகாலை மேம்படுத்துதல் மற்றும் மதுரவாயலில் இருந்து கூவம் வரை மாற்றுக் கால்வாய் அமைத்தல். | 3 | 83.89 | 15 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| III | வடக்கு பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்துதல் | 1 | 110.05 | 89 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| V | தெற்கு அடையாறிலிருந்து ஒக்கியம் மடுவு வரை தெற்கு பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்துதல். (0 முதல் 10500மீ வரை) பகுதி–I & II | 2 | 46.86 | 44 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| VI | ஒக்கியம் மடுவிலிருந்து முட்டுக்காடு காயல் வரை தெற்கு பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்துதல். பகுதி III–ல் [10500 மீ 23500 மீ வரை] | 1 | 78.14 | 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| VII | வீரங்கால் ஓடை மற்றும் வேளச்சேரி ஏரியின் குறுக்கு மாற்று வடிகாலை மேம்படுத்துதல் | 2 | 82.05 | 55 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| VIII | அம்பத்தூர் ஏரியை மேம்படுத்துதல் | 1 | 19.63 | 22 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| | மொத்தம் | 14 | 483.67 | |

## 3.7. 13–ஆவது நிதிக்குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் ( 2011–2012 முதல் 2014–2015 வரை)

இத்திட்டம் 2011–2012 முதல் நான்கு ஆண்டு காலங்களில் செயல்படுத்தப்படும். மாநிலத்தில் குறித்த இனங்களுக்கான மானியத்தின் கீழ் பின்வரும் 2 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### (i) கடலோர பாதுகாப்பு

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 7 கடலோர மாவட்டங்களில் ரூ.199.93 கோடி மதிப்பீட்டில் 50 கடலோர பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 26 பணிகளை மேற்கொள்ள நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதில் பின்வரும் 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:-

1. வடசென்னை, சின்னகுப்பம் அருகில் எண்ணூர் விரைவுச் சாலையில் (எல்.எஸ்.15/580 கி.மீ – எல்.எஸ்.15/760 கி.மீ) அவசர பாதுகாப்பு மற்றும் தற்போதுள்ள பழுதடைந்த கடலரிப்பு தடுப்புச் சுவரைப் புனரமைத்தல் **மதிப்பீடு: ரூ.62 இலட்சம்**

2. வடசென்னை, பெரியகுப்பம் அருகில் எண்ணூர் விரைவுச் சாலையில் (எல்.எஸ். 16/110 கி.மீ – எல்.எஸ். 16/290 கி.மீ) அவசர பாதுகாப்பு மற்றும் தற்போதுள்ள பழுதடைந்த கடலரிப்பு தடுப்புச் சுவரைப் புனரமைத்தல். **மதிப்பீடு : ரூ.67 இலட்சம்**

3. வடசென்னை, தாழங்குப்பம் அருகில் எண்ணூர் விரைவுச் சாலையில் (எல்.எஸ். 16/850 கி.மீ – எல்.எஸ். 17/350 கி.மீ) அவசர பாதுகாப்பு மற்றும் தற்போதுள்ள பழுதடைந்த கடலரிப்பு தடுப்புச் சுவரைப் புனரமைத்தல். **மதிப்பீடு: ரூ.2 கோடி**

மீதமுள்ள 23 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

### (ii) மரபு சார்ந்த நீர் நிலைகளைப் புனரமைத்தல்

தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்டங்களில், 674 மரபு சார்ந்த நீர் நிலைகளை ரூ.200 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் 2011–2012–இல் 163 பணிகளை ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது. பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

## 3.8. செயற்கை முறையில் நீர்ச்செறிவூட்டும் திட்டம்

செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச் செறிவூட்டும் பெருந்திட்டம் ரூ.550 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் மூலம் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நீர்ச்செறிவு துளைகள் ஆகியவை கட்டப்படுகின்றன.

செயற்கை முறை நீர்ச்செறிவு கட்டமைப்புகள் மூலம் ஆறுகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் வழிந்தோடும் மிகுதி நீரை முறைப்படுத்தி நிலத்தடி நீர் இருப்பினை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது கடல் நீர் உட்புகுதலை தடுத்து மழைக்காலங்களில் வெள்ளத்தை தணிக்கிறது. இத்திட்டம் மேலும் இரண்டாண்டுகளுக்கு (2012-13 வரை) நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.265.11 கோடிக்கான 523 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.109.75 கோடி மதிப்புடைய 296 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.76.61 கோடி மதிப்புடைய 72 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 147 பணிகள்

ரூ.78.07 கோடி மதிப்பில் விரைவில் துவங்கப்படவுள்ளன. மீதமுள்ள 8 பணிகள் கைவிடப்பட்டன.

## 3.9. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் 2007–2008 முதல் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

### 2010–2011 ம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கள்

2010–2011 ஆம் ஆண்டில் 3 பணிகளுக்கு ரூ.2.08 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் ஒரு பணி முடிவடைந்துள்ளது. ஒரு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள ஒரு பணியான திண்டுக்கல் மாவட்டத்தில் கவுன்சி கிராமத்தில் கோனலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி வனத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1. | பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தின் அத்தியூர் கிராமத்திலுள்ள அத்தியூர் ஏரியினை நவீனப்படுத்துதல் | 62.00 | 18.65 |
| | மொத்தம் | 62.00 | 18.65 |

அத்தியூர் ஏரியினை நவீனப்படுத்தும் பணிகள் முடிவுற்றபின் 272 எக்டேர் ஆயக்கட்டுக்கு பாசனம் உறுதி செய்யப்படும். 168 டன் நெல் உற்பத்தியும் 6980 டன் கரும்பு உற்பத்தியும் அதிகரிப்பதுடன் 1500 மக்களும் பயன் பெறுவர்.

### 2011–2012 ம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கள்

தஞ்சாவூர், திருவாரூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ரூ.3.45 கோடி மதிப்பிலான 6 பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 3 பணிகள் முடிவடைந்துள்ளன. 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 1 பணி விரைவில் தொடங்கப்படும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், அக்ரஹாரம் கிளுவத்தூர் கிராமம், பாமனியாற்றின் குறுக்கே, மைல் 79/27–இல் ஆற்றின் படுகை மட்டத்தை நிலைநிறுத்த படுகை மட்ட சுவர் கட்டுதல் | 30.00 | 19.95 |
| 2. | திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், ஓரத்தூர் கிராமம் பாமனியாற்றின் குறுக்கே மைல் 78/06–இல் ஆற்றின் படுகை மட்டத்தை நிலைநிறுத்த படுகை மட்ட சுவர் கட்டுதல் | 45.00 | 24.90 |
| | மொத்தம் | **75.00** | **44.85** |

இந்த 2 திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 130.70 எக்டேர் ஆயக்கட்டு பாசன வசதி பெறுவதுடன் 474 விவசாயிகள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

இம்மையம், மாநிலத்தின் நிலத்தடி நீர், மேற்பரப்பு நீர் மற்றும் நீர்த்தன்மை ஆகியவை குறித்த தகவல்களை பராமரிப்பதன் மூலம் நிலத்தடி நீர் தொடர்பான பல்வகை காலமுறை ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டம், மழையளவு, வானிலை விவரங்கள் மற்றும் நீர்த்தன்மை ஆகியவற்றுக்கான விவரங்கள் இம்மையத்தால் சேகரிக்கப்படுகின்றன.

மாநிலத்தின் ஒரு பகுதியில் நுண்ணிய அளவில் நிலத்தடி நீர்த்திறன் குறித்து கணக்கீடு செய்வதற்காக சிற்றூர் அளவில் புவியியல் மற்றும் இதர விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கடல் நீர் ஊடுருவலைத் தவிர்ப்பதற்காக கடலோரங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகள் கண்காணிக்கப்படுகின்றன.

இத்துறை, பொது மக்கள், விவசாயிகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு அறிவியல் அடிப்படையில் நிலத்தடி நீர்வளம் மிகுந்த இடங்களைக் கண்டறிந்து உதவுவதன் மூலம் பொது மக்கள், குறிப்பாக விவசாயிகள் நிலத்தடி நீரினை கண்டறிவதற்கான கடின உழைப்பு மற்றும் பண விரயத்திலிருந்து பாதுகாக்கின்றது.

சேகரிக்கப்பட்ட விவரங்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் விலை அடிப்படையில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

## 5. தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் – 2007

மாநிலத்தில் உள்ள ஏரிகளைப் பாதுகாத்திட "தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 2007 (தமிழ் நாடு சட்டம் 8/2007) நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும், அதன் விதிகளும் 01.10.2007 முதல் அமுலுக்கு வந்துள்ளன. இச்சட்டத்தை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பொதுமக்களுக்கும், குறிப்பாக கிராம பகுதியில் இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், ஏரிகளை அதன் தொன்றுதொட்ட கொள்ளளவுடன் நல்ல முறையில் பராமரிக்கவும் சிறு கையேடுகள், சுவரொட்டிகள், பத்திரிக்கைகள் மற்றும் தண்டோரா அறிவிப்புகள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஏரிகளின் எல்லைகளைக் கண்டறிந்து, ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை அகற்றி, மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுத்திட, ஏரிகளின் எல்லைகளில் கற்காரைக் கம்பங்கள் நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்வள ஆதாரத்துறையின் பராமரிப்பில் 13699 ஏரிகள் உள்ளன. இதுவரை 3474 ஏரிகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஏரிகளில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 6. தமிழ்நாட்டில் 51 வறட்சிக்கு இலக்காகும் ஒன்றியங்களில் உள்ள நீர்நிலைகளை சீரமைத்து, புதுப்பித்து நிலை நிறுத்துதல்

51 வறட்சிக்கு இலக்காகும் ஒன்றியங்களிலுள்ள 338 மானாவாரி ஏரிகளை சீரமைத்து புதுப்பித்து, நிலைநிறுத்துவதற்கான திட்ட மதிப்பீடு ரூ.220 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடுகள் அரசால் அமைக்கப்பட்ட மாநில தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவினரின் பரிசீலனை மற்றும் அனுமதி பெற வைக்கப்படும். தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிடமிருந்து அனுமதி பெறப்பட்ட பின்னர், மத்திய அரசின் நீர்வள அமைச்சகத்தின் நிதி கோரி அனுப்பி வைக்கப்படும். மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான நிதி பங்கீட்டு விகிதம் 90:10 ஆகும்.

## 7. மணல் குவாரி

02.10.2003 முதல் மணல் குவாரி பணிகளை பொதுப்பணித்துறை செயல்படுத்தி வருகிறது. தற்பொழுது மணல் லாரி லோடு (2 யூனிட்டுகள்) ஒன்றிற்கு ரூ.600/– என விற்கப்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் 02.12.2010 நாளிட்ட ஆணையின்படி மாநில அளவிலான கண்காணிப்பு குழு தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள், 1959–னை தீவிரமாக செயல்படுத்த அமைக்கப்பட்டுள்ளது.

மணல் விற்பனை மூலம் 2011–2012 ல் 3133932 லாரி லோடுகள் (2 யூனிட்டுகள்) விற்கப்பட்டு அரசுக்கு ரூ.188.03 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 8. பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சி (IMTI)

திருச்சிராப்பள்ளி, பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், பாசன வேளாண்மை தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் பாசன மேலாண்மை குறித்த பயிற்சிகளை வழங்கி வருகிறது.

### நடைபெற்ற பயிற்சிகள்

இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு கல்வி சுற்றுபயணத்திற்காக முதுநிலை /நடுநிலை அலுவலர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். பாசன பங்கேற்பு மேலாண்மை, மேம்பட்ட நிலஅளவை நுணுக்கங்கள், பாசன

கட்டமைப்புகளின் வடிவமைப்பு, பாசன கட்டமைப்புகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல், பாசன நீர் அளவீடு, நீர் சேமிப்பு நுணுக்கங்கள், பாசன மேலாண்மை சார்ந்த கணினி தொலையுணர்வு (Remote Sensing), புவியியல் தகவல்முறை (GIS), கணினி மூலம் வரைதல் (Auto CAD), மனிதவள மேம்பாடு ஆகியவை குறித்த பயிற்சிகள் நடுநிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

கணினி தொடர்பான அடிப்படை மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சிகள் அலுவலக நிர்வாகப் பணியாளர்கள்/வரைவு அலுவலகர்களுக்கு வழங்கப்பட்டன. நீர் மேலாண்மை மற்றும் பாசன பங்கேற்பு மேலாண்மை பற்றிய பிற மாநிலங்களின் அனுபவத்தை நேரில் கண்டறிய ஆந்திரா, குஜராத், மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் ஒரிசா முதலான பல்வேறு மாநிலங்களுக்கு துறை அலுவலர்களும் உழவர் பெருமக்களும் களப் பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் பாசன மேலாண்மை சட்டம் குறித்து புதிதாகப் பணியேற்ற பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கத் தலைவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன. புத்தறிவு கருத்தரங்கு மற்றும் திறன் மேம்படுத்தும் பயிற்சிகள், பங்கேற்பு பாசன மேலாண்மை ஆதரவு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டன. 2011–2012 ஆம் ஆண்டில் 2891 அலுவலர்களுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் 124 பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**கே.வி. இராமலிங்கம்**
**பொதுப்பணித் துறை அமைச்சர்**